**O.S.No.52/2021**

வா.சா.01, திருமதி.அன்புக்கரசி
நாள் : 28.01.2025 நேரம் : 04.40 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழமேல் 20 அடி என்றாலும், தென்வடல் 20 அடி என்றாலும் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தான 400 சதுர அடியும் எனக்கு பாத்தியம் என்றால் சரிதான். பிராதில் வீடு இருப்பதை காட்டி வழக்கு வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்கு பக்கம் வீடு உள்ளது, தெற்கில் உள்ள இடத்திற்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 400 சதுரஅடியை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் எனக்கு பாத்தியம் உள்ளதா என்றால் பக்கத்தில் பாதை உள்ளது. நான் குறிப்பிடும் பாதை பத்திரத்தில் அளவுகளுடன் காட்டப்பட்டுள்ளதா இல்லை, அது பொதுப்பாதையாகும்.

2)பொதுப்பாதை என்பதற்கு தனியாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது கணவர் எனக்கு எழுதி கொடுத்த பத்திரத்தின் அடிப்படையில் உள்ள சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பாதையின் அளவுகளை நான் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை, அளவுகள் தெரியாது, வண்டிபோகும் அளவிற்கு இடம் உள்ளது. மேற்படி பாதை எவ்வளவு நாள்களாக உள்ளது என்றால் 50 வருடங்களாக உள்ளது. மேற்படி இடத்திற்கு தெற்கே பாதை இருப்பதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும், பிரதிவாதியாகிய மங்களத்திற்கும் பிரச்சனைகள் ஏற்பட்டு 3 முறை காவல் நிலையம் சென்றுள்ளோம் என்றால் சரிதான்.

3)காவல் நிலையம் செல்வதற்கு முன்பு எங்கள் ஊரை சேர்ந்த யாதவர் சங்க உறவினர்கள் 30 பேருக்கு மேல் வைத்து பிரதிவாதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் சரிதான். இருவரும் சேர்ந்து எங்கள் ஊர் யாதவர் சங்கத்தில் பேச்சுவார்த்தை நடத்த எனது கணவரும், பிரதிவாதியும் சேர்ந்தே சென்றார்கள் என்றால் சரிதான். 3 முறை பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அவ்வாறு நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியதில் யாதவர் சங்கம் சார்பாக எனது உறவினர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது கணவருடன் உடன்பிறந்தவர்கள் 3 பேரும், மற்ற 25 பேருக்கும் மேல் பொதுவான நபர்கள் இருந்தார்கள். முதன்முதலாக எனக்கும், பிரதிவாதிக்கும் பிரதிவாதியின் இடத்தின் மேல் மின் இணைப்பு ஏற்படுத்தும் போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, பொது இடத்தில் ஏற்படுத்தும் போது பிரச்சனை ஏற்பட்டது.

4)நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், பொது இடத்தில் மின் இணைப்பு ஏற்படுத்தவில்லை என்றாலும், பிரதிவாதியின் இடத்தில் மின் இணைப்பு ஏற்படுத்திய போது பிரச்சனை ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. 2வது பிரச்சனையாக பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வைக்கோல் படப்பு வைப்பதில் தான் பிரச்சனை என்றால் இல்லை, பொது இடத்தில் வைப்பதில் தான் பிரச்சனை. மின் இணைப்பு ஏற்படுத்தியது சம்மந்தமாகவும், வைக்கோல் படப்பு வைப்பது சம்மந்தமாகவும் பிரச்சனை ஏற்பட்டதே தவிர பாதை என்பதற்காக எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய இடம் முன்பு பாண்டியம்மாள், பஞ்சம்மாள், நாகவள்ளி ஆகியோருக்கு பாத்தியம் என்றால் இல்லை, அவர்களின் இடத்தை நான் கிரையம் வாங்கவில்லை.

5)21.10.2010ம் தேதி ஆவண எண். 1661/2010ன் படி பூச்சி மனைவி பாண்டியம்மாள், சித்திரவேல் மனைவி பஞ்சம்மாள், சுப்பிரமணியன் மனைவி நாகவள்ளி, இருளாண்டி மனைவி சண்முகவள்ளி கிரையம் பெற்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும், அந்த இடத்திற்கும், வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. பிராதில் தாவா சொத்தானது 07.09.2018ம் தேதி இருளாண்டி மனைவி

சண்முகவள்ளி என்பவரிடம் எனது கணவர் கிரையம் வாங்கிய சொத்து என்று கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் தாவா சொத்து இருளாண்டி மனைவி சண்முகவள்ளியிடம் இருந்து கிரையம் வாங்கி எனக்கு தானமாக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான், சண்முகவள்ளி எழுதி கொடுத்த இடத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. செல்லம்மாள் எழுதி கொடுத்த இடத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் உள்ளது.

6)நான் வீடு கட்டியிருக்கும் இடத்திற்கு வடக்கே முனியாண்டி காலிமனை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கும் தெற்கே வெள்ளையம்மாள் மனையிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வீடு கட்டியிருக்கும் இடத்திற்கு கிழக்கே செல்லம்மாள் காலிமனை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கும் தெற்கே தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கும், இடத்திற்கும் தெற்கே தான் பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரிதான். நான் வேறு நபரிடமும், பிரதிவாதி வேறு நபரிடமும் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதியும், நானும் வெவ்வேறு சர்வே எண்களில் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் எனக்கு பாத்தியம் ஏதும் கிடையாது.

7)எனது இடத்திற்கும், பிரதிவாதியின் இடத்திற்கும் கிழக்கேயும், தெற்கேயும் ரோடு உள்ளது என்றால் சரிதான். தெற்கே ரோடு உள்ளதாக சண்முகவள்ளி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 05.40 P.M

சாட்சியின் கையொப்பம்.